

schulstart+

பெற்றோரின் உதவியுடன் வெற்றிகரமாக பள்ளிகூட காலத்தை ஆரம்பித்தல்.

«schulstart+» என்ற குறியீட்டுப் பெயருடன் கரிதாஸ் சூறிச் வெளிநாட்டவர்களின் 2 தொடக்கம் 5 வயது வரையுள்ள
பிள்ளைகளுக்கும் அவர்களது பெற்றோர்களுக்கும் நேசறி மற்றும் பாடசாலைக்கான ஆயத்தப் படுத்தல்களிற்கு உதவி புரிகின்றது.

இத்திட்டத்தின் நோக்கம் வெளிநாட்டவர்களின் பிள்ளைகளிற்கு பாலர்பாடசாலை (நேசறி) தொடக்கத்தை வெற்றிகரமாக ஆரம்பிப்பதே.
வெற்றிகரமான நேசறிக் காலம் பின்னர் தங்குதடையின்றிய பாடசாலை அனுமதிக்கு மிகவும் முக்கியமானது.

இதற்காக நடத்தப் படும் பட்டறையில் பெற்றோர்கள் சுவிசின் கல்வித் திட்டத்தை திறம்பட அறிய முடியும். இதன் போது அவர்களது பிள்ளைகளும் பராமரிக்கப் பட்டு விளையாட்டு, பாடல் மற்றும் கைவேலை போன்ற விடயங்களில் ஈடுபடுத்தப் படுவர்.

பட்டறை::
இந்த பட்டறையானது 8 வாரங்களிற்கு நடைபெறும். இதற்கான செலவு 20.- பிறாங்குகள் மட்டுமே. பிள்ளைகள் பராமரிக்கப்படுவர். வகுப்பு வாரம் ஒரு முறை பிற்பகலில் 2 மணித்தியாலங்கள் நடைபெறும்.

4 தடவை பெற்றோரும் பிள்ளைகளும் தனித்தனியாக.
இதன் போது
- பெற்றோருக்கு பள்ளிக்கூடம் சார்ந்த தகவல்கள் அளிக்கப்படும்
- பிள்ளைகளுக்கு வியைாட்டுடன் பராமரிப்பு

4 தடவைகள் பெற்றோரும் பிள்ளைகளும் சேர்ந்து. இதன் போது
- பராமரிப்பகம் (ஸ்பீல்குறுப்பு) மற்றும் நேசறிகளை பார்வையிடல்
- கைவேலை மற்றும் விளையாட்டுகளுடன் கூடிய நிகழ்வுகள்.

விடயங்கள்:
- சூறிச் மாநிலத்தின் நேசறி (பாலர்பாடசாலை) மற்றும் கல்வித்திட்டம்
- நேசறியில் என்ன செய்யப்படுகின்றது?
- பெற்றோர்கள் தமது பிள்ளைகளை எவ்வாறு நேசறிக்கு முன்னரும் பாடசாலையில் சேர்ந்த பின்னரும் ஊக்குவிக்க முடியும்?
- பெற்றோரிடமிருந்து ஆசிரியர்கள் எதிர்பார்ப்பது என்ன?
- பிள்ளைகளின் பாடசாலைக் கல்வியின் வெற்றிக்கு என்ன தேவை?
- நிறுவனங்களினதும் அதனது சேவைகள் பற்றியதுமான தகவல்கள்.

தொடர்புகளுக்கு:
கரிதாஸ் சூறிச்
Caritas Zürich, schulstart+, தொலைபேசி: 044 366 68 68,
மின்னஞ்சல்: schulstart@caritas-zuerich.ch